# வவுனியாவில் ராணுவத்தின் முயற்சி முறியடிப்பு 10 படையினர் பலி; ஆயுதங்களும் மீட்பு

(நமது நிருபர்) தொடர்ந்து வவுனியாவில் ஏ.. புலிகள் மேற்கொண்டகடு முன்னேற முற்பட்ட இராணு நொச்சிமோட்டைக்குப்பு வத்தினர் பெரும் சேதத்துடன் பின்வாங்கி விட்ட போதும் இடையில் நிலைகொண்டிருந்த இராணு முயன்ற போது விடுதலைப் வத்தினர் நேற்று முன்தினம் புலிகள் இடைமறித்து கடு 11 மணித்தியால மோதல் (4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

## தரம், நிறை குறைந்த பாண்; தயாரிப்பின் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நிறை குறைவான பாண் தயாரிப்போர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் எடுத்த முடிவின்படி 350 கிராம் நிறையுள்ள பாண் தரத்துடன் தயாரிப்பதாக தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இன்று 350கிராமுக்கு குறைவாகவும், தரமில்லாத பாணும் தயாரித்து விற்கப்படுகிறது. (4ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 பெப்ரவரி (13 - 02 - 1991) புதன்கிழமை ஓசை: 360

## அமெரிக்கா அணுவாயுதத்தைப் பாவித்தால்

# இந்தியா உடன் அணு ஆயுதம் உற்பத்தி செய்ய வேண்டும்

## ராஜீவ்காந்தி சந்திரசேகருக்கு கடிதம்

(டில்லி)

பாரசீக வளைகுடா யுத்தத்தில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா அணு ஆயுதங்களைப் பாவித்தால் இந்தியாவும் உடனடியாக அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ்காந்தி பிரதமர் சந்திரசேகரைக் கடித மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமெரிக்கா அணுவாயுதங்களை வளைகுடா விவகாரத்தில் பிரயோகிக்குமேயானால் இந்தியாதன் வசம் உள்ள அணுவலுவைப் பாவித்து அணுவாயுதங்களாக மாற்றியமைக்க வேண்டும். அதைத்தவிர வேறு வழியெதுவும் இல்லை என்று ராஜீவ் காந்தி பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வளைகுடாவில் அணுவாயுதப் போர் மூண்டால் இந்தியாவில் அணுவாயுத போர் நடத்த தயாராவதைத்தில் சொல்ல வேண்டும் என்றும் இந்திரா காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

### இந்தியா ஏவுகணைத் பரீட்சிப்பு

(டில்லி)

தரையில் இருந்து தரைக்குப் பாயும் ஏவுகணை ஒன்றை இந்தியா நேற்று முன்தினம் வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்த்தது.

ஆந்திர மாநிலத்தில் உள்ள ஹரிகோட்டாவில் இருந்து இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

## நொச்சிமோட்டை மோதலில் நேற்று முன்தினம் 6 படை பலி

(கொழும்பு)

வவுனியாவில் நேற்று முன்தினம் நொச்சிமோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பத்துப் பேர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## புல்லுமலையில் கண்ணிவெடி கவசவாகனம் முற்றாகச் சேதம்

(புல்லுமலை)

புல்லுமலை இராணுவ முகாமுக்கும், 10ஆம் கட்டை இராணுவமுகாமுக்கும் இடையில் ஆடுமாபாலம் என்னும் இடத்தில் வைத்து நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் ஒரு கவசவாகனம் முற்றாகச் சேதமானதுடன் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் உள்ளனர் இருந்தும் இராணுவத்தினரின் இழப்புகள் பற்றிய விபரம் எதுவும் தெரியவரவில்லை.

### ஒரு படை பலி; ஆறு பேர் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் (4ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவிலும் மோதல் இரு புலிகள் வீர மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாம் இராணுவத்தினர் குண்டு வீச்சு விமானங்கள் கடற்படை பிரங்கிகள் என்பனவற்றின் உதவியுடன் பல முனைகளிலும் முன்னேற பெரும் முயற்சியெடுத்து வருகின்றனர் இவர்களின் முயற்சி விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலால் முறியடிக்கப்பட்டு வருவதாகத் தெரிறது:

இம் மோதல்களில் இராணு (4ஆம் பக்கம் பார்க்க)

### குடும்பஸ்தர் காலை இழந்தார்

(நல்லூர்)

கடலில் தொழிலுக்குச் சென்றவர் மிதிவெடியில் சிக்கி தனது இடது (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவெளியுறவுகொள்கை முன்னுக்குப் பின் முரணானது

### -நிகால் பெரேரா

(கொழும்பு)

சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கை முன்னுக்குப் பின் முரணானது அமெரிக்க விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் அதேவேளை அணிசேரா நாடுகளின் செகிரேட்டரியும் நாட்டையும் கட்டும்படி கேட்டுள்ளது. டி.வி.கே.பி. (4ஆம் பக்கம் பார்க்க)

### பெரிய வானொலி நிலையம்

(கொழும்பு)

தென் இழக்க சியாவிலேயே மிகப்பெரிய வானொலி நிலையம் சிறிலங்காவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் சிறிலங்காவுக்கும், யப்பானுக்குமிடையில் டோக்கியோவில் கைச்சாத்தாகியது.

## பாதமிழந்தமூன்று குழந்தைகள்

(யாழ்ப்பாணம்)

வாய்க்காலில் மிதந்துவந்த பொருளை எடுத்து பந்தடித்து விளையாடிய மூன்று பாலகர்களின் கால்கள் சிதறின. நேற்று பகல் ஒரு மணியளவில் இச்சம்பவம் பரந்தனில் நடைபெற்றது.

ம. வனஜா இரண்டரை வயது. ம. பிரபாகரன் எட்டு வயது. ம. சிவதர்சினி பன்னிரெண்டு வயது ஆகிய இக் குழந்தைகள் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மன்னார் மாவட்ட சேதங்களை புனரமைக்க நடவடிக்கை

(மன்னார்)

அசம்பாவிதங்களினால் மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ள சேதங்களை புனரமைக்க மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இதற்காக இந்த வருடத்துக்குரிய பண ஒதுக்கீட்டை அர (4ஆம் பக்கம் பார்க்க)

## போலி விசா மோசடிக் குழு கொழும்பில் பொலிசாரால் கைது

(கொழும்பு)

வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களுக்கு போலி விசா அச்சிட்டு வழங்கும் மோசடி ஒன்றைக் கொழும்புக் குற்றத் தடுப்புப் பொலிஸார் கண்டு பிடித்துள்ளார்கள்.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

(4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

**போட்டோஸ்ரப்**

போட்டோஸ்ரட் பிரதி எடுக்கவும், றோனியோ பிரதி எடுக்கவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள "ஜீவி" 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (B 1994)

**வரலாறு**

விற்பனையாகின்றது! வரலாறு - அண்டு: 11, வரலாறு - ஆண்டு: 6 (புதிய பாடத்திட்டம்) ஆசிரியர்: நடராசா பாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (R 1083)

**அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு**

மேற்படி சீட்டிழுப்பு 17-02-1991 ஞாயிறு காலை 10.00 மணிக்கு சித்தன்கேணியில் உள்ள வைஸ் பண்டகத்தில் நடைபெறும். பரிசு சீட்டுக்கள் வாங்கியோர் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர் Lions Club of Vaddukoddai. தலைசிவகம் பருக்கலைவர். (R-1099)


பிரிட்டிஷ் தூதுவரிடம் வவுனியா பிரஜைகள் குழு

# இராணுவத்தினது செயல்களை பகிரங்கப்படுத்த வேண்டுகோள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா அரச படைகள் மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல் செயல்கள் மற்றும் பொருளாதார தடை நடவடிக்கைகளை வெளியுலகுக்கு அம்பலப்படுத்தி மேற்படி செயல்களை நிறுத்த உதவும்படி வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினர் பிரிட்டிஷ் தூதுவர் திரு கிளட்ஸ்டனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் அரசபடைகளால் பொதுமக்கள் அனாவசியமாக கைது செய்யப்படுவதும் கைது செய்யப்பட்டவர்கள் எங்கு இருக்கின்றனர்; அவர்களுக்கு என்ன கதி நேர்ந்தது என்பதைப்பற்றி அறிய முடிவதில்லை கைது செய்யப்படுபவர்களில் சிலர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்படுகின்றனர் என்றும் பிரஜைகள் குழுவினர் எடுத்துக் கூறினார்கள்.

மேலும் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் செயலக மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளால் இம்மாவட்டத்தில் விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளான விவசாய இடுபொருள்கள், எரிபொருள்கள் மீதான தடை பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

இவ்வாறான படையினரின் மனித உரிமை மீறல் செயல்களை நிறுத்துவதற்கு பிரிட்டிஷ் அரசுடன் தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## இராமகிருஷ்ணர் பிறந்த நாள்

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 156 ஆவது பிறந்த தினம் எதிர் வரும் சனிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படும்.

இம் மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ இராமகிருஷ்ண - சுவாமி விவேகானந்த நாளும் நடைபெறும்.


**போட்டோஸ்ரட்**

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுக்கும் நாடுங்கள்.

**சித்ராலயா**

351, கோவில் வீதி, நல்லூர்.
(கோவில் பின் வீதியில், மயன் கோட்ட முன்பாக)
(B-1928)


## ராக்கிங் என்ற போர்வையில் பண்பாட்டுச் சீரழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மட்டுமல்ல சில ஆசிரியர்களும் "ராக்கிங்" என்ற போர்வையில் தமிழர் பண்பாட்டை சீரழிக்க முனைகின்றனர்.

இம்பெயர்ந்து இயங்கி வரும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிலும் ஆசிரியர்களில் சிலர் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்கால சந்ததியை கட்டி வளர்க்க வேண்டிய பயிற்சியை பெறுவதற்கு சென்ற இந்த ஆசிரியர்கள் இவ்வாறான கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவது வேதனைக்குரியது. (ஈ)

## எட்டு வருடங்களாக ஓய்வூதியம் பெற முடியாத விதவைகள்

(யாழ்ப்பாணம்)

அரசிடமிருந்து பணம் அனுப்பப்படாததாலும், ஓய்வூதிய விண்ணப்பங்கள் கொழும்பில் தேங்கிக்கிடந்தமையாலும் கடந்த எட்டு வருடங்களுக்கும் மேலாக யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த விதவைகள் பலர் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என யாழ் செயலக ஓய்வூதியப் பகுதி பிரதம கணக்காளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

பொதுவாக யாழ் மாவட்ட ஓய்வூதியர்களுக்கு நவம்பர் மாத மற்றும் டிசம்பர் மாத ஓய்வூதியங்கள் வழங்கப்படாத நிலையிருந்தது விளக்குகையில் இவர்களுக்கென கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட ஓய்வூதிய வவுச்சர்கள் எம்மிடம் வந்து சேர்ந்து விட்டன.

ஆனால் அதற்கான பணம் இன்னும் வந்து சேரவில்லை. இதனால் வவுச்சர்களை ஓய்வூதியதாரருக்கு அனுப்பாது இங்கே எமது அலுவலகத்தில் வைத்திருக்கிறோம். பணம் வந்து சேர்ந்ததும் இது அனுப்பி வைக்கப்படும் என்றார்.

மேலும் யாழ். அரச அதிபர் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தடவை கொழும்புடன் தொடர்பு கொள்கின்றாரெல்லாம் இவ்விடயம் சம்பந்தமாக தொடர்பு கொண்டு வருகிறார் ஆனால் உடனடியாக ஏதும் இடைப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை என்றார்.

விதவைகள் ஒய்வூதியமும் அவர்களது மிச கொடுப்பனவுகள் சம்பந்தமாகவும் அவர் குறிப்பிடுகையில் இனி எமக்கு பணம் வருமிடத்து இந்த ஓய்வூதியர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று ஆணித்தரமாக குறிப்பிட்டார். (லே.)

## இணைப்புக் கூட்டம்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமிய அபிவிருத்திக் குழுக்களின் இணைப்புக் கூட்டம் எதிர்வரும் 16-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு குருநகர் பாஷ்சால் வீதியில் உள்ள சாள்மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து அபிவிருத்திக் குழுக்களின் உறுப்பினர்களையும், இதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர், தொண்டர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## இருபொறையின் கவிதைத் தொகுதி

தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞர் இருபொறை தமிழீழத்தில் வந்து நிறைபாது எழுதிய 2 அவது கவிதைத் தொகுதி வெளிவந்திருக்கிறது.

"மறைகின்ற சூரியன் இரத்தம் சிந்துவதால் தான் மறுநாளும் வருகின்றது" என்ற இக்கவிதைத் தொகுதியில் தமிழீழ மக்களின் உணர்வுகளை கவிஞர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இக்கவிதைத்தொகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசார வெளியீட்டு வாரியத்தினால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

## நிர்வாகிகள் தெரிவு

ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. திரு சி பாஸ்கரன் தலைவராகவும், திரு. எல். சௌந்தரராஜன், செயலாளராகவும், திரு மகாலிங்கம் பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் உப-தலைவர், உப செயலாளருடன் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திரு. இராசநாயகம் ஞானசிங்கம்பிள்ளை

ரயில்வே இளைப்பாறிய ஊழியரான திரு இராசநாயகம் ஞானசிங்கம்பிள்ளை 12.02.1991 இல் காலமானார் அன்னார் தையிட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது மல்லாகம் பதிவிகிலை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் காலஞ்சென்ற கமியின் அன்புக் கணவரும், புஸ்பராணி, புஸ்பராஜா, ஜெயராணி, ஜெயராஜா (குட்டி), தேவராஜா (ஈசன்) கருணைராஜா (சந்திரன்), யோகராணி யோகராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், விவேகானந்தன் குணம், சங்கரராஜா, சத்தியபாமா, சுதா, வசந்தி, தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் மரணச் சடங்குகள் 12.12.1991 இல் மல்லாகத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: சி. செல்வராசா

(R-1100)



## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 13

1985ஆம் ஆண்டு கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த

லெப் சைமன் (க. ரஞ்சன் - பொத்துவில்)
லெப்-பழகு (மு. ஹேமசிறி - தும்பளை, பருத்தித்துறை)
கென்னடி (க. செல்வராசா - கிரான், மட்டக்களப்பு)
கஜந்தரூபன் (பொ. சந்திரகுமார் - கல்லடி, மட்டக்களப்பு)
ஜெகன் இடியமீன் (ச. பிரபாகரன் - திருமலை)
காந்தி (க. பரமேஸ்வரன் - தம்பலகாமம்)
ரவி (கா. தர்மராசா - செம்மலை)
வேதா (கனகு இராசநாயகம் - கண்டாவளை)
ரஞ்சன்/மாமா (பொ. சண்முகநாதன் - கண்டாவளை)
காத்தான் (து ஸ்ரீ முருகன் - பரந்தன்)
மயூரன் (கு. துவாரகன் - சாவகச்சேரி)
சொனி (ச. அன்ரனி - சாவகச்சேரி)
தனபாலன் (தி வரேந்திரன் - காரைநகர்)
சங்கர் (பா. பாலகணேசன் - வல்வெட்டித்துறை)
மகான் (க. செல்வராசா - கப்பர்மலை)
நிமால் (க. ஜெயந்தன் - பருத்தித்துறை)

996 ஆம் ஆண்டு வவுனியா பூவரசங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் எதிர்பாராத தாக்குதலில் வீரமரணமடைந்த

சிவா (வவுனியா)

இதே ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் வீரமரணமடைந்த

2ஆம் லெப் தேவா (சி. சிவகுமார் - பாலம்பிட்டி, மன்னார்)

1987ஆம் ஆண்டு கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

செல்வம் (ச லோகநாதன் - பாலமோட்டை, ஓமந்தை)

1988 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

லெப். சூரி (க தவராச - சத்திவெளி, மட்டக்களப்பு)

1981 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

வில்லியம் (மாணிக்கபகுமார் - வவுனியா)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

– விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-1991)

★ சிந்தனைக்கு ★

அவனுக்கு சர்க்கரை போல வாய்
ரம்பம் போல இதயம்
—திபெத் நாட்டுப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 13-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2258
[illegible]

# வளைகுடா அன்றைய நிலை இன்றில்லை

வளைகுடாப் போர் ஆரம்பித்து இருபத்தி ஐந்து நாட்கள் முடிவுற்ற நிலையில் போர் ஆரம்பிக்கப்பட்ட போது இருந்த அரசியல் சூழ்நிலை இன்று இல்லை. அதேபோன்று இராணுவ ரீதியாகவும் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்கவில்லை. போர் இன்னும் மாதக் கணக்கில் நீடிக்கலாம் எனவும் தெரிய வருகின்றது.

ஈராக் குவைத்தை இணைத்துக் கொண்டதற்கு எதிராக ஐ.நா.வில் பெரும்பான்மையான நாடுகள் ஈராக்கைக் கண்டித்தும் எதிர்த்தும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றின. ஈராக் குவைத்தை விட்டு வெளியேற காலக்கெடுவும் விதிக்கப்பட்டது. ஆகவே ஈராக்கிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் முன்னின்று செயற்பட்டது.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததை உலகமே எதிர்த்ததனாலும், பெரும்பான்மையான நாடுகள் தமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் மூழ்கியிருந்ததனாலும் அமெரிக்காவின் முயற்சிகளுக்குப் பெரும் எதிர்ப்புகள் தோன்றவில்லை. அதோடு அமெரிக்காவின் செயற்பாடு ஐ.நா.வின் வரன்முறைக்கு உட்பட்டதாக இருக்கும் எனவும் அவை எதிர்பார்த்தன போலும்.

ஆனால், அமெரிக்கா ஈராக் மீது யுத்தத்தை ஆரம்பித்ததே முறையே ஐ.நா. வரன்முறையை மீறிய செயலாக இருந்தது. ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலுக்கு அறிவிக்காமலே அமெரிக்கா யுத்தத்தை ஆரம்பித்தது. பின்னர் அமெரிக்கா மேற்கொண்ட யுத்த முறைகளும் ஐ.நா. வரன்முறையை மீறியதாகவே இருந்தன. ஈராக் மீதான தாக்குதல்கள் அந்நாட்டின் மக்களையும் வளங்களையும் பொருளாதாரத்தையும் ஆட்சித் தலைவரையும் அழித்துவிடுவதை நோக்கமாகக் கொண்டது போலத் தெரிந்தது. அதாவது குவைத்தை விட்டு ஈராக்கை வெளியேற்ற மேற்கொள்ளப்பட்ட போர் என்ற போர்வையில் ஈராக்கை அழித்துவிடுதல் என்ற அமெரிக்காவின் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வரம்பு மீறிய செயலை இன்று உலகம் ஏற்கவில்லை. ஏனெனில், ஏற்க முடியாத அளவிற்கு உலக நாடுகளின் நலன்கள் இதில் சம்பந்தப்பட்டு விட்டன. மேலும், ஈராக் போரில் தோற்கடிக்கப்படுவதை அரபு ஆட்சியாளர்கள் சிலர் விரும்பினும் மக்கள் அதை விரும்பவில்லை. போர் ஆரம்பித்ததன் பின்னர் அரபுலகில் சதாம் ஹுசைனுக்கு இருந்த ஆதரவை விட இன்று பலமடங்கு ஆதரவு பெருகியுள்ளது.

இந்நிலையில் உலக அரசியல் சூழ்நிலையிலும் குறிப்பிடக் கூடிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதுவரை அமெரிக்காவின் ஈராக் மீதான செயலை சோவியத் கண்டித்துள்ளதோடு, இது தொடர்வதை ஏற்க முடியாது எனவும் தெரிவித்துள்ளது. இந்நிலை தொடர்ந்தால் ஈராக் அழிக்கப்படுவதும், சதாம் ஹுசைன் விரட்டப்படுவது ஒரு புறம் நிகழ, தனது கொல்லைப் புறத்தினுள் அமெரிக்காவை அனுமதிப்பதற்கு சமமான செயலாக இது இருப்பதோடு, சோவியத்தின் உள்நாட்டுப் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்து விடும் என்பது சோவியத்திற்கு நன்கு தெரியும். மேலும் அரபு மக்களின் பெருமளவு மனத்தாங்கலையும் சம்பாதிக்க வேண்டிய நிலைவரும்.

மேலும் அரபு உலகில் இருந்து ஈராக் மீதான குண்டுவீச்சிற்கு எதிர்ப்புக்கள் வலுவடைந்துள்ளதோடு, அமெரிக்கா தலைமையில் போருக்கு இராணுவத்தை அனுப்பிய மேற்கு நாடுகளுக்கு இடையிலும் சிறிதளவு கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

அதோடு அமெரிக்காவின் செயற்பாடுகளை ஐ.நா.வும் ஓரளவு கண்டிக்கத் தொடங்கியுள்ளது. போர் ஆரம்பிக்கும் போது அமெரிக்காவின் கைப்பொம்மை போல் செயற்பட்ட ஐ.நா. செயலாளர் போரைப் பற்றியும் அமெரிக்காவின் நடவடிக்கைகள் பற்றியும் விசனம் தெரிவித்துள்ளார்.

இன்று ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலையை நோக்கும் போது அமெரிக்கா போரில் ஐ.நா. குறிக்கோளை மட்டுமே நிறைவேற்றும் என எண்ணியவர்களை ஏமாற்றி விட்டதா? அல்லது அமெரிக்க வெற்றி சந்தேகத்திற்குரியதாகிவிட்டது. இனி எதிர்காலம் என துணிவைக் கொடுத்து விட்டதா? அல்லது ஈராக் தோற்கடிக்க முடியாத சக்தி ஆகிவிட்டது. இதனால் அமெரிக்காவிற்கு எதிராக ஈராக்கை பயன்படுத்தலாம் என்ற எண்ணம் உருவாகி விட்டதா? என எண்ணத் தோன்றுகிறது. இதில் எதுவானாலும் போர் ஆரம்பித்த அரசியல், இராணுவச் சூழல் இன்றில்லை என்பதே உண்மை.

# அமெரிக்க 'பாலைவனப் புயலில்' குறிதவறாத க்ரூஸ் ஏவுகணைகள்

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் குறி தவறாது செல்லும் க்ரூஸ் ஏவுகணைகளைப் பயன்படுத்தி வருகின்றன. ரொம்பஹக் என அழைக்கப்படும் இந்த ஏவுகணைகள் ஒலியை எழுப்பிக்கொண்டிராது வான்வெளியை ஊடறுத்துச் செல்கின்றன. உலகத்திலேயே குறிதவறாது இலக்குகளைச் சென்றடையும் அதிநவீன ஆயுதமாக நிபுணர்கள் இதனைக் கருதுகிறார்கள்.

வளைகுடாச் சண்டையின் ஆரம்பத்தில் இந்த ஏவுகணைகளின் சக்தி நிரூபிக்கப்பட்டு விட்டது. ஈராக்கின் மீதான தாக்குதலுக்கு க்ரூஸ் ஏவுகணைகளே முதலில் ஏவப்பட்டன. இதன் பின்னரே கூட்டுப்படைகளின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலில் ஈடுபடக் கூடியதாக இருந்தது. க்ரூஸ் ஏவுகணைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையின் ஊழியர்கள் இரவு பகல் ஓய்வில்லாமல் கடமையில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த ஏவுகணை ஒவ்வொன்றினதும் பெறுமதி 10 லட்சம் அமெரிக்க டொலர்களாகும். இந்த ஏவுகணைகள் கப்பலில் இருந்து அல்லது நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படவல்லவையாகும். புகை போன்று கிளம்பும் இந்த ஏவுகணை 42 விநாடிக்கு [illegible] செல்லவையாகும். ராடார் கருவிக்கு அகப்படாமல் தாழ்வான உயரத்தில் இவை பறக்கக் கூடியன. சுமார் ஒருமணி நேரத்திற்கு நிலைத்து, வளைந்து செல்லக் கூடியதாக தயாரிக்கப்பட்டதாகும்.

கட்டடத்துக்கு மட்டுமல்ல, கட்டடத்தின் சன்னலைக் கூட குறிவைத்து தாக்கக் கூடியதாக அதாவது மிக நுணுக்கமாக இலக்கு வைக்கக் கூடியதாக இது தயாரிக்கப்பட்டுள்ளது.

## புஷ்ஷின் பாதுகாப்பிற்காக போம்மைக் கார்கள், ஹெலிகள்

(வாஷிங்டன்)

ஏற்கனவே உலகின் மிகப் பெரும் அளவில் பாதுகாக்கப்பட்டுவரும் உலகத் தலைவர்களில் ஒருவராக விளங்கும் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு வளைகுடா யுத்தம் காரணமாக மேலும் பெருமளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி 17 ஆம் திகதி வளைகுடா யுத்தம் ஆரம்பிக்கு முன்னரே பாதுகாப்பு ஏஜெண்டுகள் வெள்ளை மாளிகையில் எல்லா இடங்களிலும் நிறுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் மாளிகையைச் சுற்றியுள்ள இரும்பு கேட்டுகளுக்கு வெளியேயும் தேசிய பூங்கா பொலிசார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதி புஷ் வெள்ளை மாளிகைக்கு வெளியே உடற்பயிற்சி செய்வதற்கு சிறிது தூரம் சென்றால் கூட பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர் சில மைல் தூரம் சென்றாலும் அவர் செல்லும் பாதைகளில் சகல வாகனங்களும் தடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ஓடும் போது அவருக்கு முன்பாக இரண்டு உளவுப் பிரிவினரும் பின்னால் ஒருவரும் ஓடி வருகின்றார்கள். ஜனாதிபதியின் காருடன் இரண்டு பொம்மைக் கார்களும் செல்கின்றன. ஹெலிகொப்டருடன் செல்கின்றன.

பயங்கரவாதத் தாக்குதல் குறித்து எந்நேரமும் விழிப்புடன் தாம் இருப்பதாக ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

## மன்னாருக்கு கப்பலில் விறகு

(மன்னார்)

மன்னார் தீவில் தங்கியுள்ள இராணுவத்தினருக்கு கொழும்பில் இருந்து வரும் கப்பல்களில் விறகும் கொண்டு வரப்படுகின்றது. கடந்த மாதம் 24 ஆம் திகதி மன்னார் வந்த அபேசல கப்பலில் பெருமளவு விறகு வந்து சேர்ந்தது.

## வீட்டுக்குள் மிதிவெடி; பெண் காலிழப்பு

(நல்லூர்)

நாரந்தனைப் பகுதியில் விறகு பொறுக்கச் சென்ற பெண்மணி சிறிலங்கா இராணுவத்தினர் வீடொன்றுக்குள் வைத்திருந்த மிதிவெடியில் சிக்கி காலை இழந்துள்ளார்.

குமாரவேல் இராசம்மா என்ற 44 வயதுடைய இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

## பாராளுமன்றத்தில் 'இன ஒருமைப்பாடு'

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பத்திரிகையாளர் றிச்சர்ட் டி சொய்சா தொடர்பான பிரேரணை ஒன்றில் பெயர் கூறி வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது சிங்கள அமைச்சர்கள் தமிழிலும், தமிழ் அமைச்சர்கள் சிங்களத்திலும் பதில் அளித்து 'இன ஒருமைப்பாட்டை' காட்டிக்கொண்டனராம்.

றிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணை நடத்த ஆணைக்குழு நியமிக்க கோரும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நடந்த போது பெயர் கூறி நடத்தப்பட்ட சந்தர்ப்பத்திலேயே அமைச்சர் ஜோன் அமரதுங்கா 'இல்லை' என தமிழிலும், ராஜாங்க அமைச்சர்களான தேவராஜ் செல்லச்சாமி, ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோர் 'விருத்தய்' என்று சிங்களத்திலும் பதில் அளித்தனராம்.

பொலிஸில் இறந்த தோட்டத் தொழிலாளி

## முண்டம் சவப்பெட்டியில் உறுப்புக்கள் கோணிப்பையில்

சிறிலங்கா பொலிஸ் பாதுகாப்பில் இருந்த தெனியாய கலைப் பகுதியைச் சேர்ந்த மாலிபொட தோட்டத் தொழிலாளியின் முண்டம் ஒரு சவப்பெட்டியிலும், இதர உறுப்புக்கள் ஒரு கோணிப் பையிலும் வைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டன.

இத்தொழிலாளியின் மரணம் தொடர்பான வழக்கு எம். ஆர். பெர்னாண்டோ புள்ளே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இரண்டாம் முறையாக பிரேத பரிசோதனை நடாத்திய பேர்னாட் அல்விஸ் சாட்சியம் அளிக்கும் போது இறந்தவரின் உடலில் முப்பத்தொரு ஊமைக் காயங்களும் சிராய்வுகளும் காணப்பட்டதாகவும் இவை குண்டாந்தடியால் தாக்கப்பட்ட போது ஏற்பட்டதாகவும் உடலின் மிருதுவான சவ்வுகள் கிழிந்ததாலும் இரத்தப்பெருக்கினாலுமே இந்த மரணம் சம்பவித்தது என்று தெரிவித்தார்.

## பயிற்சி வகுப்புகள்

அராலி முருகன் சனசமூக நிலையத்தில் செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவின் அனுசரணையிலான (இரண்டாவது) முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. (20)

## கடவுச்சீட்டு அலுவலகம் செயலற்றுக் கிடக்கிறது

(குருநகர்)

யாழ். செயலகத்தில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் அலுவலகம் கடந்த சில வாரங்களாகச் செயலற்றுக் கிடக்கிறதாம்.

நாள் தவறாது விண்ணப்பதாரர்கள் சென்றும் அலுவலகம் திறந்திருந்தும் அலுவலர் இல்லாதிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேற்படி அலுவலகர் ஓய்வு நாட்களிலும் கடமை புரிவதாக தெரிய வருகிறது.

அதேவேளை இருகிளைகளிலும் சிற்றூழியர் பொதுமக்களைத் தடுத்து வைக்கும் நீண்ட நேரம் காத்திருந்து திரும்ப நேர்வதாகவும் தெரிய வருகிறது. (21)

